# தமிழ்நாடு
# கால்நடை மருத்துவ
# அறிவியல் பல்கலைக்கழகம்

# மக்கள் சாசன கையேடு
# 2023

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
மாதவரம் பால் பண்ணை
சென்னை – 600 051

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

## மக்கள் சாசன கையேடு

**I. அறிமுகம்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மாதவரம் பால்பண்ணை வளாகம் சென்னையில் இயங்கி வருகிறது. பல்கலைக்கழக தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர், கால்நடை நலக் கல்வி இயக்குநர், நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் ஆகியோருக்கான அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தொலைநிலைக் கல்வி இயக்குநர் அலுவலகம் சென்னை நந்தனத்திலும், சிகிச்சையியல் இயக்குநர் அலுவலகம் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்திலும் அமைந்துள்ளன.

**நோக்கங்கள்**

- கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியலில் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கான தரமான கல்வியை அளித்தல்
- கால்நடை மற்றும் கோழி உற்பத்தி, நலப் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய அடிப்படை மற்றும் உயர்மட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- கால்நடை மற்றும் கோழியின வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்பத் தகவல்களைக் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் விரிவாக்கக் கல்வி மூலம் பரப்புதல்

**பணி**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமானது (TANUVAS) 20.09.1989அன்று துவக்கப்பட்டு கல்வி அளித்தல், கற்றலை மேம்படுத்தல், ஆய்வு மேற்கொள்ளல், அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் கால்நடை மருத்துவ அறிவியலின் பல்வேறு நுணுக்கங்களை ஊரக மக்களுக்கு கொண்டு செல்லுதல் ஆகிய குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது.

**தொலைநோக்கு பார்வை**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை, கோழி மற்றும் உணவு அறிவியலில் கல்வி மற்றும் ஆராய்ச்சி, அறிவியல் சார் கால்நடை/கோழி பராமரிப்பினை பரவலாக்கம் செய்தல், கால்நடை நலம் மற்றும் உற்பத்தி சார்ந்த தொழில்நுட்பங்களைப் உருவாக்கும் நிறுவனமாக விளங்கும் இலக்குடன் கூட்டிணைந்த அணுகுமுறை மூலம் செயல்பட்டு வருகிறது.

**தோற்றம் மற்றும் வளர்ச்சி**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியானது சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உருவாக்கத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியானது தொடக்கத்தில் ஒரு நவீன வேளாண்மைப் பள்ளியாகக் கால்நடை மருத்துவ அறிவியல் துறையில் பட்டயம் (Diploma) மற்றும் சான்றிதழ் (Certificate) படிப்புகளை அளிக்கும் வகையில் சென்னை சைதாப்பேட்டையில் 1876ல் உருவானது. சிறந்த நிர்வாகத்தால் பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்பள்ளி 1903ல் கல்லூரியாக உயர்த்தப்பட்டுச் சென்னை வேப்பேரியில் செயல்படத் தொடங்கியது. 1974ல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்று பின்னர் 1976ல் அப்பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரி ஆனது. இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல்லில் 1985ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டு கல்லூரிகளும், தமிழக அரசு 1989இன் சட்டம் 42ன் படி பல்கலைக்கழகக் கல்லூரிகளாக உருவாக்கப்பட்டு, 20.09.1989 அன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உருவானது.

கடந்த 2012-13ம் ஆண்டில் கூடுதலாக இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் திருநெல்வேலியிலும், தஞ்சாவூரிலும் (ஒரத்தநாடு) துவக்கப்பட்டன. தற்போது 2020-21 ஆம் ஆண்டு முதல் சேலம், உடுமலைப்பேட்டை மற்றும் தேனி ஆகிய இடங்களில் மேலும் மூன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1993 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட உணவு மற்றும் பால்வள தொழில்நுட்ப நிறுவனம்

10-04-2012 அன்று உணவு மற்றும் பால்வள தொழில்நுட்பக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. கோழி உற்பத்தி மற்றும் மேலாண்மையில் கல்விக்காகவும் கோழியின தொழில்துறையின் தேவைசார் ஆராய்ச்சிக்காகவும் புதிய தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் செயல்படுத்துதலுக்காகவும் ஒசூரில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி 2012ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

இந்தியாவில் மொத்தமுள்ள 63 வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் கால்நடை மருத்துவம், விலங்கு மற்றும் மீன்வள அறிவியல் உட்பட்ட வேளாண் அறிவியலில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய துறைகளில் சீரிய செயலாக்கத்திற்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உயரிய விருதான சர்தார் படேல் விருது-2011 கடந்த 16.07.2012அன்று இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால், அக்கழகத்தின் 84வது நிறுவன விழாவில் வழங்கப்பட்டது.

## II. கல்வி

### இளநிலை கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் கால்நடைப் பராமரிப்புப் பட்டம் (B.V.Sc. & A.H.)

இப்பட்டப்படிப்பு ஐந்தரை ஆண்டு (நான்கரை ஆண்டு பாடத்திட்டம் மற்றும் ஒரு ஆண்டு உள்ளுறைப் பயிற்சி) கால அளவைக் கொண்ட முழு நேர படிப்பு ஆகும். இந்திய கால்நடை மருத்துவ குழுவின் பாடத்திட்ட விதிகளுடன் (MSVE - 2016) நடத்தப்படும் இப்பட்டப்படிப்பில் ஆண்டுக்கு 580 மாணவர்கள் ஏழு கல்லூரிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

**இளநிலை உணவு தொழில்நுட்பப் பட்டம் (B.Tech. – Food Technology)**

இப்படிப்பு நான்கு ஆண்டு (எட்டு பருவங்கள்) முழு நேர கால அளவு பட்டப்படிப்பாகும். இதில் ஒரு பருவம் தொழிற்சாலை அனுபவ படிப்பும் அடங்கும். ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்கள் இப்படிப்பில் சேர்க்கப்படுகிறார்கள்.

**இளநிலை கோழியின தொழில்நுட்பப் பட்டம் (B.Tech. – Poultry Technology)**

இப்படிப்பு, ஒரு பருவம் தொழிற்சாலை அனுபவ படிப்பு உட்பட மொத்தம் நான்கு ஆண்டு (எட்டு பருவங்கள்) கால அளவைக் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்கள் இப்படிப்பில் சேர்க்கப்படுகிறார்கள்.

**இளநிலை பால்வள தொழில்நுட்பப் பட்டம் (B.Tech Dairy Technology)**

இப்படிப்பு நான்கு ஆண்டு (எட்டு பருவங்கள்) முழு நேர பட்டப்படிப்பாகும். இதில் ஒரு பருவம் தொழிற்சாலை அனுபவ படிப்பை உள்ளடக்கியது ஆகும். ஒவ்வொரு ஆண்டும் 20 மாணவர்கள் இப்படிப்பில் சேர்க்கப்படுகிறார்கள்.

**இளநிலை பட்ட படிப்புகளுக்கான இடஒதுக்கீடு விபரங்கள்**

மேல்நிலை பள்ளிப்படிப்பில் (10+2) தேர்ச்சியுற்ற மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தின் இளநிலை பட்டப்படிப்புகளில் சேர முடியும். இப்படிப்புகளில் சேருவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் மற்றும் ஒதுக்கீடுகள் ஆகியவை தமிழக அரசால் நிர்ணயிக்கப்படுகின்றது. வெளிநாடுவாழ் இந்தியர்கள், அயல்நாட்டினர் மற்றும் இதர சிறப்பு பிரிவினருக்கான ஒதுக்கீடுகள் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| இட ஒதுக்கிட்டு பிரிவின் விபரங்கள் | பி. வி. எஸ்சி மற்றும் ஏ. எச் | பி. டெக் (உணவு அறிவியல்) | பி. டெக் (கோழியின தொழில்நுட்பம்) | பி. டெக் (பால்வள தொழில்நுட்பம்) |
|---|---|---|---|---|
| வெளிநாடு வாழ் இந்தியர்கள்* | 9 | 2 | – | – |
| அயல் நாட்டினர்* | 5 | 2 | – | – |
| காஷ்மீர் குடிபெயர்ந்தோர்* | 2 | – | – | – |
| மாற்று திறனாளிகள் | 5% (மொத்த இடங்களில்) | 5% (மொத்த இடங்களில்) | 5% (மொத்த இடங்களில்) | 5% (மொத்த இடங்களில்) |
| விளையாட்டு வீரர்கள் | 5 (3 ஆண்கள் | 1 | 1 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | + 2 பெண்கள்) | | | |
| 7.5% அரசு பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்ற மாணவர்கள் | 7.5% (மொத்த இடங்களில்) | 7.5% (மொத்த இடங்களில்) | 7.5% (மொத்த இடங்களில்) | 7.5% (மொத்த இடங்களில்) |
| முன்னாள் இராணுவத்தினர் | 2 | 1 | 1 | 1 |
| தொழிற் பிரிவு பாட மாணவர்கள் | 5% (மொத்த இடங்களில்) | – | – | – |
| இந்திய கால்நடை மருத்துவ குழுமம் | 15% (மொத்த இடங்களில்) | – | – | – |
| இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் | – | 15% (மொத்த இடங்களில்) | | |

* மொத்த இடங்களைவிட உபரியாக ஏற்படுத்தப்பட்டவை

**முதுநிலை தொழில்நுட்பம் (M.Tech.)**

இந்தப் பட்டப்படிப்பு நான்கு பருவங்களை உள்ளடக்கிய இரண்டாண்டு முழு நேர படிப்பாகும். சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் இளநிலை தொழில்நுட்ப பட்டம் (பி. டெக்.) பெற்ற பட்டதாரிகள் இப்படிப்பிற்கு தகுதியுடையவர்களாவர்.

**முனைவர் பட்டம் (பிஎச். டி. – கால்நடை மருத்துவம்/ உணவுத் தொழில்நுட்பம்/ உயிர்த்தொழில்நுட்பம்)**

இப்பட்டப்படிப்பு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியலில் 20 பாடப்பிரிவுகளிலும், உயிர்த்தொழில்நுட்பம் ஒரு பாடப்பிரிவிலும் மற்றும் உணவு தொழில்நுட்பம் மூன்று பாடப்பிரிவிலும் வழங்கப்படுகிறது. இப்பட்டப் படிப்பு ஆறு பருவங்களை உள்ளடக்கிய மூவாண்டு முழுநேர படிப்பாகும். முனைவர் பட்டப் படிப்புகளில் சேர அந்தந்த பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டம் (M.V.Sc. / M.Tech./M.Sc.) பெற்றவர்கள் தகுதியுற்றோர் ஆவர்.

**முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளில் சேர்க்கைக்கான தகுதி**

முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளில் சேரும் மாணவர்கள் முறையே இளநிலை (B.V.Sc. / B.Tech.) மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் (M.V.Sc. / M.Tech.) உரியபாடத்தில் OGPA 6.5/10.00 அல்லது 2.75/4.00 க்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். SC/ST பிரிவு மாணவர்கள் குறைந்தபட்சம் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது.

**கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அடிப்படை அறிவியல் புலங்களில் அளிக்கப்படும் பட்டய படிப்புகள்**

**பட்டய படிப்புகள்**

- **முதுநிலை பட்டய படிப்பு –** தோழமை விலங்கின மருத்துவம்
- **முதுநிலை பட்டய படிப்பு –** பால் பதனிடுதல் மற்றும் தரக்கட்டுப்பாடு
- **முதுநிலை பட்டய படிப்பு –** சிறு விலங்கின அவசரநிலை மற்றும் தீவிர பராமரிப்பு
- **முதுநிலை பட்டய படிப்பு –** மூலக்கூறு உயிரியல்

**மருத்துவ சிகிச்சைக்கான வசதிகள்**

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் சிறிய மற்றும் பெரிய கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல் மற்றும் நோயறிதலுக்கான உயர்நிலை மருத்துவ வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகளைப் பெற்றிருக்கின்றன. மருத்துவம், அறுவை சிகிச்சை, இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறைகளில் நோயுற்ற கால்நடைக்கான உள் மற்றும் புற நோயாளி மருத்துவப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேலும் மாதவரம் பால்பண்ணையில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக புறநகர் மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேலும், கால்நடைகளுக்கான சிகிச்சை அளிப்பதற்கான மூன்று மருத்துவமனைகள் சேலம், தேனி மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் அமைத்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற நவீன பல்கலைக்கழக ஆசிரியர் புல பயிற்சி மையங்கள்**

- கால்நடைச் சிகிச்சை மருத்துவம், சென்னைக் கால்நடை மருத்துவ கல்லூரி, சென்னை.
- பறவையின அறிவியல் – கோழியின அறிவியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்

கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் **(TRPVB)**

இத்தளம் இந்திய அரசின் உயிர்த்தொழில்நுட்பத் துறை பங்களிப்புடன் இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள தனித்தன்மை வாய்ந்த தளமாகும். கல்விசார் ஆராய்ச்சி முடிவுகளை தொழில் துறையுடன் கூட்டிணைந்து தரக்கட்டுப்பாடு இணக்கத்துடன் கூடிய கால்நடை மருத்துவ உயிர்ப்பொருட்களின் உற்பத்தியை உக்குவிப்பது இத்தளத்தின் குறிக்கோளாகும். இத்தளம் கால்நடை மருத்துவ உயிர்ப்பொருள் வளங்களின் அறிவுப்பெட்டகமாக விளங்குவதுடன் பொருள் உற்பத்தி மேம்பாட்டின் பல்வேறு நிலைகளில் பங்குதாரர்களுக்கு உதவியாகவும் இருக்கிறது. இதுவரை இத்தளத்திலிருந்து 14 பொருட்கள் தொழில்நுட்ப பரிமாற்றம் மூலம் வணிகமயமாக்கப்பட்டுள்ளதுடன் பல

பொருட்கள்/ தொழில்நுட்பங்கள் வணிகமயமாக்கலுக்கு தயார் நிலையில் உள்ளன. இத்தளத்திலிருந்து டீட் ப்ரொடெக்ட், ப்ரோசிங்க் என்சி, புருஅலர்ட் சாதனம், தானுவாஸ் எஸ்சிசி சாதனம், தானுவாஸ் ஸ்க்ரப் உட்பட 11 பொருட்கள் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. நாய்க்கான பார்வோ நச்சுயிரி நானோதுகள் தடுப்பூசி மற்றும் நாயினங்களுக்கான நோய் எதிரியக்கத் திறன் உயர்ந்த CPV-2b தடுப்பூசி ஆகியவற்றின் தொழில்நுட்பங்கள் கடந்த ஆண்டு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாய்களில் இவான்ஸ் நோய்க்குறித் தொகுப்பை பாய்ச்சல் அணுஅளவை மூலம் கண்டறிதல் மற்றும் பிசிஆர் துணையுடன் இரத்த ஒட்டுண்ணிகளைக் கண்டறிதல் ஆகிய சேவைகளையும் வழங்கி வருகிறது. மாட்டினங்களில் A1/A2 பீட்டா கேசின் பரபணு பகுத்தல், மாட்டினங்களில் நாசிமூச்சுக்குழாய் அழற்சி மற்றும் ஜோனீஸ் நோய் ஊனீர் சோதனை மூலம் நோயறிதல் போன்ற சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தளத்திலுள்ள ஆய்வகம் மாட்டினங்களில் ஏற்படும் டிரைக்கோமோனசிஸ் மற்றும் புருசெல்லோசிஸ் ஆகிய நோய்களைக் கண்டறிவதற்கான NABL ISO/IEC 17025:2017 தர சான்றிதழைப் பெற்றுள்ளது. இதில் cGMP உரிமம் பெற்ற உற்பத்தி வசதி, ஒரு வகுப்பறை மற்றும் உயிரியல் பாதுகாப்பு நிலை–3 ஆய்வகம் ஆகியவையும் அடங்கியுள்ளது.

**பல்கலைக்கழக கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு (VIF@TANUVAS)**

சென்னையிலுள்ள தமிழ் நாடு அரசின் தொழில்முனைவு அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII), மற்றும் இந்திய அரசின் DBT-BIRAC இன் BioNEST ஆகியவற்றின் பண உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட பிரிவு–8 நிறுவனமான பல்கலைக்கழக கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு, கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்காக இந்தியாவில் முதல்முறையாக அமைக்கப்பட்ட பிரத்தியேக நிறுவனமாகும். இந்த அமைப்பில் பதிவு செய்துள்ள துவக்கநிலை நிறுவனங்களுக்கு அதிநவீன ஆய்வக வசதிகள், பண்ணை மற்றும் சிகிச்சை வசதிகள், தொழில்நுட்பம், சட்ட நுணுக்கங்கள் மற்றும் கடன் வசதிகளில் வழிகாட்டுதல் ஆகிய சேவைகளும் வழங்கப்படுகின்றன.

விரிவுரை தொகுப்புகள், பணியரங்குகள், கால்நடை தொழில்முனைவில் உதவித்தொகை வாய்ப்புகள், மாணவ–தொழில்முனைவோர் பிணைப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் தொழில்முனைவை இந்த அமைப்பு ஊக்குவிக்கிறது. இது கால்நடைத் துறையில் துவக்கநிலை நிறுவனங்களின் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளை வர்த்தகமயமாக்கம் செய்ய வழிவகை செய்யும் ஒரு முன்னோடி முயற்சியாகும்.

வி.ஐ,எப். @ தனுவாஸ் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் இணைந்து, "முற்போக்கு கால்நடை விவசாயிகள் வலையமைப்பு" என்ற ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது, இதில் 100 முற்போக்கான விவசாயிகள் கண்டறியப்பட்டு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். வி.ஐ.எப் @ தனுவாஸில் உருவாக்கப்பட்ட புதிய தயாரிப்புகள், தொழில்நுட்ப ஏற்ப ஆய்வுகள், தயாரிப்புகளின்

**களம் சார்ந்த செயல்திறன், தொழில்நுட்பங்களைச் செம்மைப்படுத்துதல் போன்றவற்றைச் சரிபார்க்க இந்த முற்போக்கான விவசாயிகள் உதவுவார்கள்.**

**வி,ஐ,எப் @ தனுவாஸின் உள்கட்டமைப்பு வசதியானது கால்நடை அறிவியல் துறையில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்க புதுமையான யோசனையுடன் வரும் தொடக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் அளவிற்கு அமைந்துள்ளது தொடக்கநிலை நிறுவனங்கள் கீழ்கண்ட துறை மற்றும் பிரிவுகளில் உள்ள பிரச்சனைகளை தீர்க்கும் வண்ணம் புதுமையான யோசனைகள் இருக்குமெனில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளலாம். கால்நடை மருத்துவத் துறை, கால்நடை பராமரிப்பு, கால்நடை உற்பத்தி, பால்பண்ணைத் தொழில், தீவனம் மற்றும் தீவனம் சார்ந்த நிறுவனங்கள், இயற்கை கால்நடை வளர்ப்பு, இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு பண்ணைகள், நோய் மேலாண்மை, விநியோகச் சங்கிலி மேலாண்மை, கால்நடை மருத்துவ சேவைகள் வசதி இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT), இயந்திரவியல் (ரோபாட்டிக்ஸ்), 3டி பிரிண்டிங், செயற்கை நுண்ணறிவு, 'செயலி' அடிப்படையிலான தொழில்நுட்பங்கள்.**

**மேலும் கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் களத்தில் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பங்பளைப் பயன்படுத்துவதில் ஈடுபடும் தொடக்கநிலை நிறுவனங்களை வி.ஐ.எப் @ தனுவாஸ் ஊக்குவிக்கிறது.**

**ஆதாரசெல்ஆராய்ச்சிமற்றும் மறுசீரமைப்புமருத்துவமையம்**

சென்னைகால்நடைமருத்துவக் கல்லூரியில், தமிழ்நாடு அரசின் நிதி உதவியோடு ஆதாரசெல் ஆராய்ச்சிமற்றும் மறு சீரமைப்பு மருத்துவ மையம், 2013–ஆம் ஆண்டில்நிறுவப்பட்டது. இந்த மையத்தின் நோக்கமானது ஆதாரசெல் ஆராய்சி மற்றும் மறுசீரமைப்பு மருத்துவத்தில் பல்துறை மற்றும் கூட்டு ஆராச்சியை அதிநவீன தொழில்நுட்பம், கால்நடை இனங்களில் இருந்து பகுக்கப்பட்ட ஆதாரசெல்கள் மற்றும் திசு உற்பத்தி உதவியுடன் கட்டமைப்பது ஆகும். இந்தமையம் அதிநவீன வசதிகள் கொண்ட நல்ல தயாரிப்பு பயிற்சி ஆய்வகம் (cGMP) ஆதாரசெல்உற்பத்தி, குணாதிசய பகுப்பாய்வு மற்றும் உருவகப்படுத்தும் உபகரணங்களை கொண்டு இயங்குகிறது மேலும், இந்த மையம் ஆதாரசெல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருத்துவத்தில் பயிற்சி அளித்து மனிதவளத்தினை மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

# மையஆய்வுகருவிக்கூடம்

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள மைய ஆய்வுக் கருவிகூடம் மாணவ ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகிறது. இந்த வசதி மற்ற பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. ஆராய்ச்சி வசதி சேவைகள் தவிர, மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் திறன்களை மேம்படுத்துவற்காக மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

**உயிர்நுட்பத்தகவல் மையம்**

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இந்திய அரசின் உயிர் தொழில் நுட்பவியல் துறையின் நிதியுதவியுடன் 1991 ஆம் ஆண்டு இவ்மையம் நிறுவப்பட்டது. ஆராய்ச்சி தகவல்களை மீட்டெடுப்பதற்கும், உயிர்நுட்பத் தகவலியலில் மனிதவள மேம்பாட்டுத் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், ஆராய்ச்சி மாணாக்கர்கள்/அறிஞர்கள் மற்றும் உயிர் தகவல் சேவைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும் இம்மையத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

**உயிர்த்தகவல் நுட்ப மையம்**

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இந்திய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறையின் நிதி உதவியுடன் 1991ல் உயிர்த்தகவல் நுட்பவியல் மையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மையத்தில் இணையம், நிக்நெட், மெட்லர்ஸ் மூலம் இணையவழிமூலம் தேவையான தரவுகளைப் பெறுவதற்கான வன் மற்றும் மென்பொருள், IBM வழங்கல், அதிக எண்ணிக்கையிலான கணினிகள் இவற்றோடு விசாட் மைக்ரோ புவி நிலையம் (VSAT MICRO EARTH STATION) மற்றும் இணையவழி தவிர்த்த நேரடி தரவுத்தள அடிப்படையிலான குறுந்தகடுகள் CD-ROM வசதி ஆகியவை உள்ளன.

## கால்நடை மற்றும் கோழியினங்களுக்கான மரபுசார் மூலிகை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்

கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கான மரபுசார் மூலிகை பயிற்சி மையங்கள் தஞ்சாவூர் மற்றும் நாமக்கல்லில் செயல்பட்டு வருகின்றன.

**III. ஆராய்ச்சி**

**நிதி முகமைகள்**

2021–22 ஆம் ஆண்டு ரூ.502.24 கோடி ரூபாய் நிதியுதவியில் 176 ஆராய்ச்சித் திட்டங்கள் பல்வேறு முகமைகள் மூலம் பெறப்பட்டு இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண் | நிதி முகமை | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அ | இந்திய அரசு முகமைகள் | | |
| | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி | 40 | 4868.58 |
| | உயிர்தொழில்நுட்பவியல் துறை, புது தில்லி | 27 | 3599.36 |
| | அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, புது தில்லி | 13 | 589.91 |
| | இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம், புது தில்லி | 2 | 98.01 |
| | அகில இந்திய நுட்ப கல்வி கழகம், புது தில்லி | 2 | 35.73 |
| | ஆயுஷ் அமைச்சரகம், புது தில்லி | 4 | 181.23 |
| | எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தி இயக்குநரகம், புது தில்லி | 1 | 150.00 |
| | நபார்டு, மும்பை | 5 | 2009.41 |
| | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை (தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், மாடின இனவிருத்திக்கான தேசிய திட்டம், தேசிய கால்நடைப் பணிக்குழுமம்) | 22 | 4458.79 |
| ஆ | தமிழ்நாடு அரசு திட்டங்கள் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள துறை, தமிழ்நாடு புதுப்புனைவு முன்முனைவு, மாநில திட்டக்குழு, தமிழ் நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகம், நீர் வள, நிலவளத் திட்டம், தொழில்முனைவு அபிவிருத்தி நிறுவனம், மற்றும் இதர தமிழ்நாடு முகமைகள்/ துறைகள் | 32 | 33038.28 |
| இ | பன்னாட்டு முகமைகள் பி.பி.எஸ்.ஆர்.சி. – டி.பி.டி, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் ஃபவுண்டேசன், செப்பிக், | 7 | 838.38 |

| வ. எண் | நிதி முகமை | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | பிரானஸ் முதலியன) | | |
| ஈ | மற்றவை | | |
| | நீர்வள, நிலவளத் திட்டம் | 1 | 200.00 |
| | வேளண் நுட்ப மேலண்மை முகமை, வேலுர் | 1 | 5.00 |
| | தமிழ்நாடு பட்டுப்புழு வளர்ப்பு, சேலம் | 1 | 6.40 |
| | தேசிய புதுப்புனைவு நிறுவனம். குஜராத் | 4 | 36.32 |
| | தமிழ்நாடு பேரிடர் குறைப்பு முகமை, சென்னை | 1 | 24.75 |
| உ | தனியார் முகமைகள் | 13 | 84.16 |
| | **மொத்தம்** | 176 | 50224.31 |

**செயல்முறை /ஆராய்ச்சிப் பண்ணைகள்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை மற்றும் கோழியினப் பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுதல் பொருட்டுப் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. கால்நடை இடுபொருட்கள், கால்நடை உற்பத்தி, நலன் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் செய்முறைப் பயிற்சிக்கான உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றுடன் இப்பண்ணைகள் இயங்கி வருகின்றன. பல்கலைக்கழக பண்ணைகளாவன,

- கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்
- மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி, சேலம் மாவட்டம்
- செம்மறியாடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா, நீலகிரி
- கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- கால்நடை பண்ணை வளாகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- கால்நடை பண்ணை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்
- கால்நடை பண்ணை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு
- கால்நடை பண்ணை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி
- மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், புதுக்கோட்டை
- கால்நடை உணவியல் நிலையம், காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்

- மைய தீவன தொழில்நுட்ப பிரிவு, காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்
- பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோடு மாவட்டம்
- காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்
- புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்
- ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம், தருமபுரி

பொதுமக்கள் மற்றும் பண்ணையாளர்கள் பயனுறும் வகையில் கீழ்கண்ட சேவைகள் இப்பண்ணைகள்மூலம் அளிக்கபடுகின்றன.

- தரம் மேம்பட்ட நட்டுக்கோழி, கறிக்கோழி, ஜப்பானியக் காடை, வான்கோழி, கினிக்கோழி, பன்றி குட்டிகள் மற்றும் முயல்கள் வகைகளை உருவாக்குதல், நாட்டின கால்நடைகளின் பால் மற்றும் இதர உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு அளித்தல்.
- அடைமுட்டைகள் மற்றும் முயல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து பண்ணையாளர்களுக்கு அளித்தல்
- புதுமையான பால் மற்றும் பால் பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களைப் பொதுமக்களுக்கு அளித்தல்
- கால்நடைகளின் உற்பத்தி பெருக்குவதற்காக, விவசாயிகளுக்கு தேவையான தீவன விதை, தீவனம் பசுந்தீவனம், தானுவாஸ் தாது உப்பு கலவை மற்றும் தானுவாஸ் கிராண்ட் வழங்கப்பட்டு வருகின்றன.
- நாட்டின கால்நடைகள் மற்றும் கோழியின வளங்களைப் பாதுகாத்தல்
- இப்பல்கலைக்கழகம் மற்றும் வெளி பல்கலைக்கழகங்களிலுள்ள இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குதல்
- பண்ணையாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான சுய வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு மற்றும் இலவசப் பயிற்சிகளை அளித்தல்
- பண்ணையாளர்களுக்கு முன்கள செயல்விளக்கம் மற்றும் அரசு திட்டங்கள் பற்றிய தகவல்களை அளித்தல்
- பண்ணையாளர்களுக்கு நேரடியாகவும், தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சி வழியாகவும் ஆலோசனைகள் வழங்குதல்
- பல்கலைக்கழகம் மற்றும் அரசு துறைகள் மூலம் நடைபெறும் பொருட்காட்சிகளில் பங்கேற்று கால்நடைகள், கோழியினங்கள், தானுவாஸ் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை பண்ணையாளர்கள் பயனுறும் வண்ணம் காட்சிப்படுத்துதல்

**ஆய்வகங்கள்**

கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளுக்குரிய உயர்வகை நோயறிதல் வசதிகள் கொண்ட கீழ்க்கண்ட ஆய்வகங்களை இப்பல்கலைக்கழகம் பெற்றிருப்பதோடு, அவற்றின் மூலம் பொதுமக்களுக்கு சேவைகளும் அளிக்கப்பட்டு வருகின்றது.

- பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- நுண்ணுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- விலங்குவழிப் பரவும் நோய்களுக்கான ஆராய்ச்சிக் கூடம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- மையப்படுத்தப்பட்ட சிகிச்சை ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- கால்நடை தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்து கண்காணிப்பு ஆய்வகம், சென்னை
- கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாட்டு சார் பரிமாற்றத் தளம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவு, மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை
- கோழியின நோய் ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஆய்வகம், நாமக்கல்
- பறவையின நோயறி ஆய்வகம், தலைவாசல்
- கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம், நாமக்கல்
- கால்நடை மருத்துவ பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் நோயறி மையம், மதுரை
- ஆதார அணுக்கள் ஆராய்ச்சி மற்றும் மீளுயிர்ப்பித்தல் மருத்துவ மையம், சென்னை
- உயிர் பாதுகாப்பு விலங்கின நோய் மருந்தியல் ஆய்வகம், சென்னை
- மைய கருவிமய ஆய்வகம், சென்னை

## IV. விரிவாக்கம்

பல்கலைக்கழகம் தனது விரிவாக்க மையங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் மூலம் வேளாண் சமூகத்தினருக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. இருபது கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், மூன்று உழவர் பயிற்சி மையங்கள், நான்கு வேளாண் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் ஒரு வேளண் தொழில்நுட்ப தகவல் மையம் ஆகியவை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

இவை பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் பயனாளிகளுக்கும் இடையே நிலையான தொடர்பை உண்டாக்கி வருகின்றன. மேலும் வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைச் செய்திகள், வெளியீடுகள், மடிப்பிதழ்கள், துண்டறிக்கைகள், நூல்கள், இதழ்கள், குறுந்தகடுகள் மற்றும் செய்தி மடல்கள் ஆகியவை மூலம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வழிமுறை நாள்தோறும் பரவலாக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள், பண்ணையாளர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் கண்டுணர் பயிற்சிகள் ஆகியவையும் பல்கலைக்கழகத்தால் அளிக்கப்படுகின்றன. நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை முன்கள செயல்முறை விளக்கம் மூலம் பரிமாறுதல், புதிய தொழில்நுட்பங்களின் பண்ணை வளாக சோதனை விளக்கம் ஆகியவையும் அளிக்கப்படுகின்றன. தானுவாஸ் தொழில்நுட்பங்கள் தேவைப்படும் பண்ணையாளர்களுக்கு கிடைக்கப்பெற செய்வதிலும் இம்மையங்கள் பெரும் பங்காற்றுகின்றன. விரிவாக்க கல்வி மையத்தின் சமூக வலைத்தளங்களான 'வலை ஒளி' மற்றும் 'முகநூல்' வாயிலாக விவசாயிகளுக்கு தேவையான கால்நடை வளர்ப்பு முறைகள், வெற்றி கதைகள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் பரவலாக்கப்படுகின்றன.

**தொடுதிரைக் கணினித் தகவல் வசதி**

பண்ணையாளர்கள் எளிதில் சுய கற்றல் மூலம் தகவல்களை அறிந்துகொள்ள படங்கள் மற்றும் காணொலிகள் அடங்கிய 21 தொடுதிரைக் கணினித் தகவல் வசதிகள் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## V. தொலைநிலைக் கல்வி

தொலைநிலைக் கல்வி இயக்ககம் கால்நடை மருத்துவர்கள், பண்ணையாளர்கள், தொழில்முனைவோர், வேலைவாய்ப்பு அற்றோர், பள்ளிப்படிப்பை இடைநிறுத்தியவர்கள் போன்ற பல்வேறு தரப்பினர்க்குக் கால்நடை மருத்துவ அறிவியலில் பயிற்சி அளித்தல், அறிவு மேம்பாடு, தொழில்நுட்ப உதவி வழங்கல் ஆகிய பொறுப்புகளுக்கு உரியதாகச் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் அச்சு மற்றும் மின்னணுத் தொழில்நுட்பம் மூலம் பரந்துபட்ட நிலையில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள், திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள், தொடர் கல்விப் பாடத்திட்டங்கள், கால்நடை மருத்துவ அறிவியலில் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. தற்போது, 10 திறன் மேம்பாட்டு பயிற்சிகள், 10 சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள், இணையவழியில் 22 முதுநிலைப் பட்டயப் படிப்புகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன.

**<u>செயல் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்</u>**

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | பால்பண்ணை உதவியாளர் | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 2. | பால் பதன நிலைய உதவியாளர் | 45 நாட்கள் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 3. | பால் மற்றும் பால் பொருட்கள் தரக் கட்டுப்பாடு உதவியாளர் | 1 மாதம் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 4. | தீவன ஆலை மேற்பார்வையாளர் | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| 5. | தீவனப் பகுப்பாய்வுத் தொழில்நுட்ப உதவியாளர் | 3 மாதம் | இளம் அறிவியல் (இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல்) அல்லது ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டத்துடன் பகுப்பாய்வில் அனுபவம் |
| 6. | கால்நடைப் பண்ணை மேலாளர் | 3 மாதம் | 12ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 7. | கோழிப்பண்ணை மேலாளர் | 3 மாதம் | 12ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 8. | குஞ்சுப் பொரிப்பக மேற்பார்வையாளர் | 1 மாதம் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 9. | கோழிப்பண்ணை மேற்பார்வையாளர் | 45 நாட்கள் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 10. | கோழிகளுக்கான தடுப்பூசி மற்றும் அலகு வெட்டுதல் தொழில்நுட்பம் | 15 நாட்கள் | 8ஆம் வகுப்புத் தேர்ச்சி |

**<u>சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்</u>**

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சிக் காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | கறவைமாட்டுப் பண்ணையம் | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 2. | செம்மறியாடு வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 3. | வெள்ளாடு வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 4. | பசுந்தீவனம் மற்றும் விதை உற்பத்தி | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 5. | உறைமோர் மூலம் பால் பொருட்கள் தயாரித்தல் | 1 மாதம் | 10ஆம் வகுப்புத் தேர்ச்சி |
| 6. | கால்நடைப் பண்ணைக் கழிவினைப் பயன்படுத்துதல் | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| 7. | முயல் வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 8. | வெண்பன்றி வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 9. | ஜப்பானியக்காடை வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |
| 10. | நாட்டுக்கோழி வளர்ப்பு | 1 மாதம் | தமிழில் எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் |

**முதுநிலைப் பட்டயப் படிப்புகள் (அஞ்சல்வழி – இணையவழி) – 15 படிப்புகள் (பயிற்சிக் காலம் : ஒரு ஆண்டு)**

**கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்காக**

1. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** மறுசீரமைப்பு மருத்துவச் சிகிச்சை (PGDRM)
2. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** சிறிய பிராணிகள் நுண்ஒலிப் பரிசோதனை (PGDDUS)
3. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** சிறிய கால்நடைகளுக்கான தோல் மருத்துவம் (PGDSAD)
4. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** கறவை மாடுகளில் மலட்டுத்தன்மையும் அதன் மேலாண்மையும் (PGDBIM)
5. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** வன விலங்கு நோய் மேலாண்மை (PGDWADM)
6. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** விலங்குவழி மனிதர்களிடையே பரவும் நோய்கள் (PGDZ)
7. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** கால்நடை மருத்துவ நோய்களை ஆய்வகச் சோதனைவழி கண்டறிதல் (PGDVCLD)
8. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** கால்நடை நலப் பொருளாதாரம் (PGDAHE)
9. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** ஆய்வக விலங்கு அறிவியல் (PGDLAS)
10. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –**கால்நடை உடலக உள்நோக்கு ஆய்வு (PGDVEN)

11, **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** பெரிய அசைபோடும் விலங்குகளின் இனப்பெருக்க நுண்ஒலிப் பரிசோதனை முறைகள்(PGDLRU)

12. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** மரபுசார் கால்நடை மருத்துவம் (PGDEVP)

**அறிவியல் / கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்காக**

13. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** கால்நடைவழி நவீன இனப்பெருக்க உயிர்த்தொழில்நுட்பம் (PGDARB)

1.4. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** விலங்கு நலம் (PGDAW)

15. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** உயிர்த் தகவலியல் (PGDBI)
16. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** பயன்பாட்டு உயிர்ப் புள்ளியியல் (PGDABS)

17. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** இறைச்சித் தொழில்நுட்பம் மற்றும் இறைச்சிப் பொருட்களின் தர உறுதி (PGDQAMP)
18. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** பண்ணைக் கழிவு மேலாண்மை (PGDFWM)
19. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** பசுந்தீவன உற்பத்தி மற்றும் மேய்ச்சல் நில மேலாண்மை (PGDFPM)
20. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** பால் பதப்படுத்துதல் மற்றும் தர உறுதி (PGDDPQA)
21. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** கால்நடைத் தீவன உற்பத்தித் தொழில்நுட்பம் (PGDFMT)
22. **முதுநிலைப் பட்டயப் படிப்பு –** வணிக முறையில் கோழி வளர்ப்பும் பராமரிப்பும் (PGDCPPM)

**<u>நூல் வெளியீட்டுப் பிரிவு</u>**

மாதவரம், பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு உள்ளது. இப் பிரிவில் கால்நடை, கோழியினம் மற்றும் இவை தொடர்பான நூல்கள் அச்சிடப்பட்டு, வெளியிடப்படுகின்றன. மேலும், "இந்தியக் கால்நடை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி இதழ்" எனும் இரு மாத இதழும், தமிழில் "கால்நடைக் கதிர்" எனும் மாத இதழும், ஆங்கிலம் மற்றும் தமிழில் "செய்தி மடல்" எனும் மாத இதழும் வெளியிடப்படுகின்றன. இவையல்லாது, கால்நடை மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைக் களப் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் மற்றும் பிற தரப்பினரிடையே கொண்டு சேர்க்கும் வகையில் 2013இல் "தொழில்நுட்ப மலர்" எனும் இரு மாத இதழ் துவங்கப்பட்டு, வெளியிடப்பட்டு வருகிறது.

**VI. பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்பு மையம்**

பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களுக்குச் சிறந்த எதிர்கால வாய்ப்பு உண்டாக்குதல், ஆளுமைத்திறன் மேம்பாடு, திறமையை அதிகப்படுத்துவற்கான தன்னம்பிக்கை வளர்த்தல், இதர மனித ஆற்றல் மேம்பாட்டுச் செயல்முறைகள் போன்றவற்றை அளித்தல் பொருட்டுப் பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்பு மையம் 13.12.2007 அன்று முதல் சென்னை கால்நடை மருத்துவ கல்லூரியிலும், 01–04–2011 அன்று முதல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், நாமக்கல்லிலும் பின்வரும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு அளித்தல்
- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள உயர்கல்வி வாய்ப்பு பற்றிய தகவல்களை அளித்தல்
- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் மேற்படிப்பு மேற்கொள்ள பல்வேறு அமைப்புகள் மூலம் நிதி உதவி பெறுவது தொடர்பான தகவல்கள் அளித்தல்

- மாணவர்கள் தங்கள் கல்வியறிவை மேம்படுத்துதல், பயிற்சி அளித்தல், போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்பு, உதவித் தொகை மற்றும் ஊக்கத் தொகை பெறுதல் ஆகியவற்றுக்கான ஆலோசனைகள் வழங்குதல்

இந்த மையமானது மாணவர்கள் நலன் கருதி ஊக்கத்திறன் பயிற்சி, வெளிநிலையப் பயிற்சி ஆகியவற்றோடு வளாக, புறவளாக நேர்முகத் வேலைவாய்ப்பு தேர்வுகளையும் தொடர்ச்சியாக நடத்திவருகிறது.

## VII. கல்லூரி / மையங்கள் / ஆய்வகங்கள் இவற்றின் தொடர்பு முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள்

**i. கல்லூரிகள்**

1. முதல்வர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வேப்பேரி சென்னை – 600 007. தொலைபேசி எண்: 044–25304000
Email:deanmvc@tanuvas.org.in
2. முதல்வர், அடிப்படை அறிவியல் புலம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகம், வேப்பேரி சென்னை – 600 007. தொலைபேசி எண்: 044–25389198
Email:deanfbs@tanuvas.org.in
3. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல் – 637 002. தொலைபேசி எண்: 04286–266469
Email:deanvcrinkl@tanuvas.org.in
4. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலி – 627 001. தொலைபேசி எண்: 0462–2336345
Email:deanvcritni@tanuvas.org.in
5. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒரத்தநாடு, தஞ்சாவூர் – 614 625. தொலைபேசி எண்: 04372–234011
Email:deanvcriond@tanuvas.org.in
6. முதல்வர், உணவு மற்றும் பால்வள தொழில்நுட்பக் கல்லூரி கோடுவளி, சென்னை – 600 052. திருவள்ளூர் மாவட்டம். தொலைபேசி எண்: 044–27680214/15
Email:deancfdt@tanuvas.org.in
7. முதல்வர், கோழியின உற்பத்தி மேலாண்மை கல்லூரி மத்தகிரி, ஒசூர் – 635 110. தொலைபேசி எண்: 04344–295164
Email:deancppm@tanuvas.org.in
8. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம். தலைவாசல் கூட்டு ரோடு, சேலம் – 636 112; தொலைபேசி எண்: 04282–291998

Email:deanvcrislm@tanuvas.org.in

9. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வீரபாண்டி, தேனி– 625534; தொலைபேசி எண்: 04546– 235400
Email:deanvcritheni@tanuvas.org.in

10. முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பண்ணைக்கிணறு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642126;
தொலைபேசி எண்: 04252–295499
Email:deanvcriudp@tanuvas.org.in

**ii. கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்**

1. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 63, காளப்பட்டிப் பிரிவு, சரவணம்பட்டி அஞ்சல், சக்தி சாலை,
கோயம்புத்தூர் – 641 035. தொலைபேசி எண் : 0422 – 2669965.

2. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 35, திருவள்ளுவர் தெரு, வரதராஜன் நகர்,
செம்மண்டலம், கடலூர் –607 001.
தொலைபேசி எண்: 04142–220049.

3. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
திண்டுக்கல் –624 141. தொலைபேசி எண்: 0451–2460141.

4. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
குண்டலப்பட்டி ரோடு, தருமபுரி– 636 703.
தொலைபேசி எண்: 04342–288420.

5. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 150, சத்தி சாலை, வீரப்பன் சத்திரம்,
ஈரோடு –638 004. தொலைபேசி எண்: 0424 –2291482.

6. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 4/221, பண்டுதகாரன் புதூர், மண்மங்கலம் அஞ்சல், கரூர் – 639 006.
தொலைபேசி எண்: 04324–294335.

7. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
சமந்தமலை அஞ்சல், ஆர்.டி.ஓ. அருகில், இராமாபுரம் எஸ்.ஓ.
கிருஷ்ணகிரி– 635 115. தொலைபேசி எண் : 04343–235105.

8. இணை பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
ஜி.பி. வளாகம், மேல்மருவத்தூர் – 603 319.
தொலைபேசி எண் : 044–27529548.

9. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 4/114, பறக்கை அஞ்சல், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் –629 601.
தொலைபேசி எண்: 04652–286843.

10. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
கால்நடை மருத்துவமனி வளாகம், வேலிபாளையம், நாகபட்டினம் – 611 001.
தொலைபேசி எண்: 04365–224123

11. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
இந்திரா நகர், இளம்பலூர் அஞ்சல், பெரம்பலூர் – 621 220.
தொலைபேசி எண்: 04328 321666

12. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 16 ஏ அன்னாமராஜா நகர், புதிய பேருந்து நிலையம் எதிரில்
இராஜபாளையம் –626 117. தொலைபேசி எண்: 04563 –220244.

13. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் – 623 503
தொலைபேசி எண்: 04567 – 231807

14. இணை பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
கால்நடை மருத்துவ வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக
பின்புறம்,
சேலம் –636 001. தொலைபேசி எண் : 0427–2410408

15 உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,

வல்லம் அஞ்சல், தஞ்சை திருச்சி நெடுஞ்சாலை, தஞ்சாவூர் – 613 403.
தொலைபேசி எண்: 04362–204009.

16. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண். 7/2, கோழிப் பண்ணை ரோடு, கொட்டப்பட்டு, இலங்கை அகதிகள் முகாம் எதிரில் திருச்சிராப்பள்ளி –620 003.தொலைபேசி எண் : 0431–2331715.

17. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
கால்நடை மருத்துவமனை வளாகம், காமராஜர் சாலை,
திருப்பூர்– 648 604. தொலைபேசி எண்: 0421 –2248524.

18. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
பைபாஸ் சாலை, அரசு மருத்துவ கல்லூரி அருகில் வட ஆண்டபட்டு,
திருவண்ணமலை – 606 604. தொலைபேசி எண் : 04175–206577

19. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி,
வேலூர் – 632 009. தொலைபேசி எண்: 0416–2253022.

20. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
டி மேட்டுப்பாளையம் போஸ்ட் விழுப்புரம் – 605 601.
தொலைபேசி எண் : 04146–225244

**iii. வேளாண் அறிவியல் நிலையம்**

1. பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஐ.சி.ஏ.ஆர் – வேளாண் அறிவியல் நிலையம்,
காட்டாங்குளத்தூர் அஞ்சல்,
செங்கல்பட்டு மாவட்டம் – 603 203.
தொலைபேசி எண் : 9940542371

2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஐ.சி.ஏ.ஆர் – வேளாண் அறிவியல் நிலையம்,
குன்றக்குடி சிவகங்கை மாவட்டம் –630 206.
தொலைபேசி எண்: 04577–264288

3. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஐ.சி.ஏ.ஆர் – வேளாண் அறிவியல் நிலையம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகம்,
நாமக்கல்–637 002. தொலைபேசி எண்: 04286–266345

4. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஐ.சி.ஏ.ஆர் – வேளாண் அறிவியல் நிலையம்,
பி.யூ. துவக்கப்பள்ளி கலாசமுத்திரம், சின்னசேலம்
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606301
தொலைபேசி எண் 8300978770

**iv. உழவர் பயிற்சி மையம்**

1. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
உழவர் பயிற்சி மையம், துணை கருவூல
அலுவலகம் எதிரில், மதுரை ரோடு, தேனி – 625
531.
தொலைபேசி எண்: 04546–260047

2. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
உழவர் பயிற்சி மையம், குறிஞ்சி நகர்,
திருவாரூர் –613 701. தொலைபேசி எண் :
04366–226263

3. இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர்,
காஞ்சிபுரம் – 631 561.
தொலைபேசி எண் : 044–27264019

**v. பண்ணைகள்/ ஆராய்ச்சி நிலையங்கள்**

1. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடைப் பண்ணை வளாகம்,
மாதவரம் பால்பண்ணை,
சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25551571

2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடைப் பண்ணை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி
நிலையம், நாமக்கல் – 637 002.
தொலைபேசி எண்: 4286–266572

3. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடைப் பண்ணை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி
நிலையம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் – 614 625.
தொலைபேசி எண்: 4372–234011

4. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை பண்ணை வளாகம்,
கால்நடைப் மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி – 627
358.
தொலைபேசி எண்: 462–2337309

5. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை பண்ணை வளாகம்,
கால்நடைப் மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112;
தொலைபேசி எண்: 04282–290998

6. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை பண்ணை வளாகம்,
கால்நடைப் மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம், தேனி– 625534;
தொலைபேசி எண்: 04546– 235400

7. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை பண்ணை வளாகம்,
கால்நடைப் மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை,
திருப்பூர் – 642126;

8. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம்
பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–2555 2650

9. பேராசிரியர் மற்றும் தலைவர்,
செம்மறி ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையம்,
சாந்திநல்லா, நீலகிரி – 643 237.
தொலைபேசி எண்: 0423–2253088

10. பேராசிரியர் மற்றும் தலைவர்,
மேச்சேரி செம்மறி ஆடு ஆராய்ச்சி நிலையம்,
பொட்டனேரி, சேலம் மாவட்டம் – 636 453.
தொலைபேசி எண்: 04298–262023

11. பேராசிரியர் மற்றும் தலைவர்,
மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம்,
மாவட்ட கால்நடைப் பண்ணை வளாகம்,
அண்டகுளம் ரோடு, புதுக்கோட்டை –622 004.
தொலைபேசி எண்: 04322–271443.

12. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு – 603 203.
தொலைபேசி எண்: 044– 27452224

13. பேராசிரியர் மற்றும் தலைவர், மைய தீவன தொழில்நுட்பப் பிரிவு, காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு – 603 203.
தொலைபேசி எண்: 044–27453029

14. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை உட்டச்சத்தியல் நிறுவனம்
கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலைய வளாகம், காட்டுப்பாக்கம், செங்கல்பட்டு – 603 203. தொலைபேசி எண் 044–27451525.

15. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம்,
பர்கூர், ஈரோடு – 638 501.

16. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்,
சத்தியமங்களம், ஈரோடு – 638 402.

17. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
பூலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்,
மானாமதுரை, சிவகங்கை – 630 606.

18. இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி மையம்,
காரிமங்கலம், தருமபுரி – 635 111.

**vi. ஆய்வகங்கள்**

1. இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
பறவையின நோய் ஆய்வகம்,
கால்நடை மருத்துவமனை வளாகம், எண்.1,333,
பட்டுத்துறைச் சாலை, தலைவாசல்–636 112.
தொலைபேசி எண்: 04282–231673.

2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கோழியின நோய் ஆய்வக மற்றும் கண்காணிப்பு மையம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், லத்துவாடி, நாமக்கல் – 637 001.
தொலைபேசி எண் : 04286–266226

3. பேராசிரியர் மற்றும் தலைவர்,
பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25551581

4. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்து கண்காணிப்பு ஆய்வகம்,
மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25550111

5. பேராசிரியர் மற்றும் தலைவர்,
விலங்குவழி மனிதர்களுக்கு பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம்
மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25559306

6. பேராசிரியர் மற்றும் தலைவர்,
தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நுண்ணுயிரி தடுப்பூசி, மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051. தொலைபேசி எண்: 044–25551544

7. பேராசிரியர் மற்றும் தலைவர்,
தடுப்பூசி ஆராய்ச்சி மையம் – நச்சுயிரி தடுப்பூசி
மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25551573

8. பேராசிரியர் மற்றும் தலைவர்,
விலங்கு தீவனம் மற்றும் தர உறுதிப்படுத்தல்

ஆய்வகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி
நிலையம், நாமக்கல் – 637 002.
தொலைபேசி எண் : 04286–266288

9. பேராசிரியர் மற்றும் தலைவர்,
கால்நடை மருத்துவ பல்கலைக் கழகப் பயிற்சி
மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை
– 625 005.
தொலைபேசி எண்: 0452–2483903.

10. உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஆய்வக விலங்கின மருந்தியல் பிரிவு, மாதவரம்
பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி எண்: 044–25551586

11. பேராசிரியர் மற்றும் தலைவர்,
மையப்படுத்தப்பட்ட கருவிமய ஆய்வகம்,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை – 600 007.
தொலைபேசி எண்: 044–25304000

12. பேராசிரியர் மற்றும் தலைவர்,
மைய ஆய்வுக் கருவி கூடம்
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை – 600 007.
தொலைபேசி எண்: 044–25304000

13. கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுகள்
பரிமாற்றத்தளம்
பல்கலைக்கழக ஆய்வக கட்டிடம், மாதவரம் பால்
பண்ணை, சென்னை – 600051
தொலைபேசி எண்: 044–25556275

14. பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஆதார செல் ஆராய்ச்சி மற்றும்
மறுசீரமைப்பு மருத்துவ மையம், சென்னை
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை – 600 007.
தொலைபேசி எண்: 044–25304000

15. உயிர்ப் கட்டுப்பாடு கால்நடை நோய் ஆய்வகம்,
மாதவரம் பால்பண்ணை
சென்னை – 600051
தொலைபேசி எண்: 044 – 25555151

**vii. வேளாண் தொழில் நுட்பத் தகவல் மையம்**

1. மேலாளர்,
   வேளாண் தொழில் நுட்பத் தகவல் மையம்
   காட்டுப்பாக்கம் – 603 203.
   தொலைபேசி எண்: 044–27452371

**viii. நூல் வெளியீட்டுப் பிரிவு**

1. இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்,
   நூல் வெளியீட்டுப் பிரிவு, தொலைநிலைக்
   கல்வி இயக்ககம் சென்னை – 600 051.
   தொலைபேசி எண். 044–25554375

**viii. பல்கலைக்கழக உறுப்பு நிலையங்களின் தொலைபேசி எண்கள்**

| **i. தலைமை அலுவலக தொலைபேசி எண்கள்** | | |
|---|---|---|
| தொலைபேசி பிரிவு | : | 044 – 25551586 / 87, 25554555/ 56, 25550550 |
| பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் பால் பண்ணை | : | 044–25551581 |
| மைய இளங்கரு உயிர்த்தொழில்நுட்பப் பிரிவு, மாதவரம் பால் பண்ணை | : | 044–25550033 |
| கால்நடை மையத் தீவனம் மற்றும் தீவன நச்சு ஆய்வுக்கூடம், மாதவரம் பால்பண்ணை | : | 044–25550111 |
| விலங்குவழி பரவும் நோய்க்கான ஆராய்ச்சிக்கூடம், மாதவரம் பால்பண்ணை | : | 044–25559306 / 0551 |
| தடுப்பூசி ஆராய்ச்சி மையம் (நச்சுயிரி நோய்கள்), மாதவரம் பால்பண்ணை | : | 044–25551573 |
| தடுப்பூசி ஆராய்ச்சி மையம் (நுண்ணுயிரி நோய்கள்), மாதவரம் பால்பண்ணை | : | 044–25551544 |
| கால்நடை மருத்துவ உயிர்ப்பொருட்களுக்கான பரிமாற்ற ஆராய்ச்சி தளம் (TRPVB) | : | 044–25556275/ 76/ 77 |
| பல்கலைக்கழக நூலகம், மாதவரம் பால்பண்ணை | : | 044–25551588 |
| புறநகர் மருத்துவமனை, மாதவரம் பால்பண்ணை | : | 044– 25559046 |
| **ii. பல்கலைக்கழக அலுவலர்கள்** | | |
| பதிவாளர் | : | 044 – 25551584 |
| தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் | : | 044 – 29997349 |
| ஆராய்ச்சி இயக்குநர் | : | 044 – 25551583 |
| இயக்குநர், கால்நடை நலக் கல்வி | : | 044 – 25555151 |
| இயக்குநர், கால்நடை உற்பத்தி கல்வி | : | 044 – 25555386 |

| | | |
|---|---|---|
| இயக்குநர், கால்நடை சிகிச்சையியல் | : | 044 – 25381366 |
| இயக்குநர், விரிவாக்கக் கல்வி | : | 044 – 25551579 |
| இயக்குநர், தொலைநிலைக் கல்வி | : | 044 – 24320411 |
| நிதி அலுவலர் | : | 044 – 25551582 |
| உடைமை அலுவலர் | : | 044 – 25551580 |
| **iii. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் அதன் பிரிவுகள்** | | |
| தொலைபேசி பிரிவு | : | 044 – 25304000 / 25385701 / 25385508/ 25386116 |
| அவசரப் பிரிவு (அலுவலக நேரம் தவிர) | : | 044 – 25381509 |
| உயிர்த் தகவல் தொழில்நுட்பவியல் மையம் | : | 044 – 25360106 / 25360114 |
| கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறை | : | 044 – 25368702 |
| புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டுத்துறை | : | 044 – 25392737 |
| வனவிலங்கு அறிவியல் துறை | : | 044 – 25360700 |
| விலங்கின உயிர்த்தொழில்நுட்பவியல் துறை | | 044 – 25369301 |
| கால்நடை நுண்ணுயிரியல் துறை | | 044 – 25381417 |
| விலங்கின இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறை | : | 044 – 25382550 |
| பால்வள அறிவியல் துறை | | 044 – 25361897 |
| நூலகம் | | 044 – 25388997 |
| விடுதி கண்காணிப்பளர் | | 044 – 25610491 |
| மாணவியர் விடுதி | : | 044 – 25610490 |
| மாணவர் விடுதி | : | 044 – 25615604 |
| பல்கலைக்கழக விருந்தினர் இல்லம் | : | 044 – 25612636 |
| **iv. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்** | | |
| தொலைபேசி பிரிவு | : | 04286 – 266491/92/93 |
| நூலகம் | : | 04286 – 266485/266743 |
| கால்நடைத் தீவனப் பகுப்பாய்வுக் தரக்கட்டுபாடு கூடம் | : | 04286 – 266288 |
| கோழியின அறிவியல் துறை | | 04286 – 266494 |
| கால்நடைப் பண்ணை வளாகம் | | 04286 – 266572 |
| சிகிச்சையியல் துறை | | 04286 – 220650 |
| கணணி மையம் | | 04286 – 266447 |

| | | |
|---|---|---|
| விருந்தினர் இல்லம் | : | 04286 – 266743 |
| மாணவியர் விடுதி | | 04286 – 266731 |
| மாணவர் விடுதி | | 04286 – 266561 |
| நோய் ஆய்வகம் | : | 04286  – 220650 |
| கணினி மையம் | : | 04286 – 266447 |
| **v. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி** | | |
| தொலைபேசி பிரிவு | : | 0462 – 2330675 |
| நூலகம் | : | 0462 – 2336343 |
| ஸ்ரீபுரம் வாளகம் | : | 0462 – 2330775 |
| ஏ.ஜி.பி மற்றும் கணினி ஆய்வகம் | : | 0462 – 2335075 |
| மாணவியர் விடுதி | : | 0462 – 2335077 |
| மாணவர் விடுதி | : | 0462 – 2335078 |
| ஐ,எல்.எப்.சி, இராமையன்பட்டி | : | 0462 – 2337309 |
| **vi. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு** | | |
| முதல்வர் அலுவலகம் | : | 04372 – 234012 /13 |
| கால்நடை மருத்துவ சிகிச்சை வளாகம் | : | 04372 – 234014 |
| கணினி மையம் | : | 04372 – 234015 |
| நூலகம் | : | 04372 – 234016 |
| விடுதி காப்பாளர் | : | 04372 – 234123 |
| மாணவியர் விடுதி | : | 04372 – 234124 |
| மாணவர் விடுதி | : | 04372 – 234125 |
| **vii. உணவு மற்றும் பால்வள தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி, சென்னை** | | |
| முதல்வர் அலுவலகம் | : | 044 – 27680214 / 27680215 / 27680217 / 27680218 |
| **viii. கோழியின உற்பத்தி மேலாண்மை கல்லூரி, ஒசூர்** | | |
| முதல்வர் அலுவலகம் | : | 04344 – 689005 |
| **ix. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம்** | | |
| முதல்வர் | | 04282–290998 |
| **x. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தேனி** | | |
| முதல்வர் | | 04546–235400 |
| முதல்வர் அலுவலகம் | | 04546–235401 |
| **xi. கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உடுமலைப்பேட்டை** | | |
| முதல்வர் | | 04252–295499 |

**பல்கலைக்கழக இணையதளம் : www.tanuvas.ac.in**